79

எண். 60

79 / 1-59

# திருபுவனத் தலவரலாறு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1959
MADRAS



கோயில் தோற்றம்

ஒ23:38·ஒ1193
N43-3
112776

0-20 தருமபுர ஆதீனம்



தருமபுர ஆதீனம் 25-ஆவது மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# திருபுவனத் தல வரலாறு

இஃது

இவ்வாலய பரம்பரைத் தருமகர்த்தா

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் அவர்களது

திருவுள்ளக் குறிப்பின்படி

திருபுவனம்


ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானத்தில்

வெளியிடப்பெற்றது

1958

முதற் பதிப்பு 1943
இரண்டாம் பதிப்பு 1948
மூன்றும் பதிப்பு 1958

ஞானசம்பந்தம் அச்சகம்,
தருமபுரம்.



ஸ்ரீ கம்பகரேசர் கருப்பக்கிரஹம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருபுவனத் தல வரலாறு

## 1. தலமும் இருப்பிடமும்

பொன்னிமாநதி புனல்மல்கி வளம் கொழிக்கும் புண்ணியம் பெற்றது சோழநாடு. இந்நாட்டில் சோழ மன்னர்களால் எடுப்பிக்கப்பெற்ற கோயில்கள் மிகப் பலவாகும். அவைகளுள் சில அம் மன்னர்களது பெருமைக்கும், புகழுக்கும், சிற்ப நுணுக்கத்திற்கும் நிலைக்களமாய் இன்றும் விளங்குகின்றன. அங்ஙனம் விளங்குவனவற்றுள் **திருபுவனம்** திருக்கோயிலும் ஒன்றாகும்.

இத்தலம் தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணந் தாலுக்காவில் திருவிடைமருதூர் இரயில்வே நிலையத்திற்கு மேற்கில் ஒரு கல் தொலைவிலுள்ளது.

## 2. தலப் பெயர்கள்


**திரிபுவன வீரபுரம்** என்பதே இத்தலத்தின் பழய பெயராகும். இப்பெயரே இவ்வூர்க் கோயிலிலுள்ள கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது. இப்பெயர் இது பொழுது **திருபுவனம்** என்று மருவி வழங்கப்படுகிறது.

இதுவேயன்றி வில்வவனம், திரிபுரவனம், தேவக்ஷேத் திரம், நிம்பாண்டியக்ஷேத்திரம் என்ற வேறு பல பெயர் களும் இத் தலத்திற்கு உள்ளன.

## 3. கோயிலமைப்பு


திருக்கோயில் ஊரின் நடுவே கிழக்கு நோக்கி இருக்கின்றது. இதற்கு முதற் கோபுரமாகிய திருத் தோரணத்திருவாயில், இரண்டாங் கோபுரமாகிய திரு மாளிகைத்திருவாயில், அர்த்தமண்டபத்தின் திருவாயி லாகிய திருவணுக்கன்திருவாயில் என்னும் மூன்று முக்கியவாயில்கள் இருக்கின்றன. எனவே தெய்வப்பாக் கிழாராகிய சேக்கிழார் பெருமானுல் திருத்தொண்டர் புராணத்தில் குறிப்பிடப்பெற்றுள்ள மூன்று திருவாயில் களும் இக் கோயிலுக்கு அமைந்திருக்கும் பெருஞ் சிறப்பு பாராட்டற்குரியதாகும். அவைகளன்றி அர்த்த மண்டபத்தின் தென்பகுதியில் ஒன்றும், வடபகுதியில் ஒன்றும் ஆக இரு வாயில்களும் பிறவும் இருக்கின்றன. முதற் கோபுரம் ஏழு நிலைகளுடனும், இரண்டாங் கோபுரம் மூன்று நிலைகளுடனும் கூடி வாயில்களை அழகுபெறச் செய்கின்றன.

இக் கோயிலுக்கு இரண்டு திருச்சுற்றுலைகள் (பிரா காரங்கள்) இருக்கின்றன. இவற்றுள் முதல் திருச்சுற் றுலையைச் சூழ்ந்து திருச்சுற்றுமாளிகை ஒன்று இருக் கின்றது. இம் முதல் திருச்சுற்றுலையின் நடுப்பகுதியில்



ஸ்ரீ கம்பகரேசர் சந்நிதி

நடுக்கந்தீர்த்த பெருமான் எழுந்தருளி யிருக்கும் கோயில் இருக்கின்றது. கருப்ப இல் (Central-shrine) அர்த்த மண்டபம், மஹா மண்டபம் என மூன்று பகுதிகளை யுடையது. கருப்ப இல்லின் விமானம் தஞ்சை இராஜராஜேச்சரம், கங்கை கொண்டசோழேச்சரம் இவைகளின் விமானங்களையே ஒத்தது ஆகும். இவ்விமானம் அறிவானந்த வடிவமானது என்று இவ்வூர்த் தல புராணங்கூறுகின்றது.



கருப்ப இல்

முதல் சுற்றுலையின் வடபகுதியில் அம்மையார் கோயிலும், அதன் கீழ்பால் சரபேசர் திருக்கோயிலும் இருக்கின்றன.

இரண்டாம் திருச்சுற்றுலையில் வசந்த மண்டபமும், யாகசாலையும் எழில்பெற அமைந்திருக்கின்றன.


## 4. மூர்த்திகள்

மூலஸ்தானத்து எழுந்தருளியிருக்கும் இறைவனின் திருப்பேயர் **ஸ்ரீ கம்பஹரேசுவரர்**. தமிழில் நடுக்கம் தீர்த்தபெருமான் என்பது போருள். **திருபுவனஈச்சர முடைய மகாதேவர்** என்பது இக் கோயில் கல்வெட்டுக் களில் குறிப்பிடப்பட்டிருக்கும் திருப்பேயராகும். இத் தலத்து அம்மையாருக்கு ஸ்ரீ **அறம்வளர்த்தநாயகியார்** என்று தமிழிலும், தர்மஸம்வர்த்தனி என்று வடமோழி யிலும் பேயர்கள் வழங்குகின்றன. பிரகலாதன், திரு மால், தேவர், மனிதர் முதலாயினோர்க்கு விளைந்த கம்பத்தினை (நடுக்கத்தை=அபாயத்தை) நீக்கியருளிய தால் இத்தலத்துப் பேருமானுக்கு இப்பேயர் ஏற்பட்டது.

இரணியனது குருதியைப் பருகிய நரசிம்மம் மதி மயங்கி, உலகத்தை அழிக்கத் தோடங்கியகாலை இத் தலத்துப் பேருமான் சரபப்பறவை வடிவங்கோண்டு அதன் கோடுமையை அடக்கியதால் சரபேச்சரர் என்ற பேயரும் இம் மூர்த்திக்கு உண்டு. அவருக்குத் தனிக் கோயிலும் இருக்கிறது

## 5. தலப் பெருமை

அசுவக்ரீவன், விருஷபக்ரீவன், வியாளக்ரீவன், பிரமன் முதலிய தேவர்கள், இலக்குமி, வரகுணபாண் டியன் ஆகியோர்களது நடுக்கத்தைத் தீர்த்து அருள் பாலித்தது. இராஜராஜேசுவரன் தன் வேற்றிக்கறிகுறி யாக எடுப்பிக்கப்பேற்றது. நரசிம்ம வடிவு கோண்டு



ஸ்ரீ சரபமூர்த்தி சந்நிதி

உலகை நடுங்கச் செய்த விஷ்ணுவின் அகங்காரத்தை அடக்கியது. சுகோஷன் என்னும் வேடனுக்கு அருள் புரிந்தது. வருணன் பூசித்தது. சித்ரரதன் வழிபட்டு அருள்பெற்றது.

## 6. புராண வரலாறு

சரபமூர்த்தி :— இரணியன், இரணியாக்கன், என்ற இரண்டு அசுரர்கள் ( அண்ணன் தம்பியர் ) பிரமனை நோக்கிக் கடுந்தவம் இயற்றி அரிய பெரிய வரங்களைப் பெற்றனர். அவர்களில் மூத்தவனாகிய இரணியன், தேவர், மனிதர், விலங்குமுதலியயாவராலும் எத்தகைய ஆயுதத்தாலும் அகம், புறம் ஈரிடத்தினும் பகல், இரவு என்ற இருவேளையிலும் சாகாத வரம் வேண்டுமென்று வேண்டிப்பெற்றான். அதனால் தன்னை எதிப்பார் ஒருவருமின்றிப் பெருஞ்சேருக்குற்றான். அச் சேறுக்கு முதிர்ந்து இறுதியில் தானே பிரமம் என்றும், தன்னை ஒழிய யாரும் எவரையும் வழிபடலாகாது என்றும் அனைவருக்கும் ஆணையிட்டான். அவ்வாணையைக் கடந்தார் யாவரே எனினும் அவர்களுக்குக் கடுந் தண்டனையும் இட்டுவந்தான்.

இங்ஙனம் நிகழும் நாளில் அவனுக்குப் பிரகலாதன் என்றொரு புண்ணியப் புதல்வன் பிறந்தான். அவன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே நாரத முனிவரது உபதேசத்தால் திருமால்பால் பேரன்புடையவனாயினான். பிறந்து மோழிபயின்று பள்ளியில் வைக்கப்பெற்றபோது அவனுடைய ஆசிரியன் ‘ஓம் நமோ இரண்ய’ என்று

கூறும்படி ஏவினுன். சிறுவன் அதனை மறுத்து 'ஓம் நமோ நாராயண' என்ருன். ஆசிரியன் பெரிதும் அஞ்சி அவ்வாறு கூடுரேணுதென நயத்தாலும், பயத்தாலும் கூறிய கூற்றுக்களை எல்லாம் மறுத்து வெளிப்படை யாகத் திருமாலின் பக்தியுடையவனுக அச் சிறுவன் விளங்கினுன். அதனை உணர்ந்த இரணியன் சிறுவனை அழைத்துப் பலவிதமாகஅச்சுறுத்தியும் சிறுவன் தந்தை யின் கருத்துக்கு இணங்கினுனல்லன். இரணியன் பெருங்கோபங்கொண்டு பல்லாற்ருனும் சிறுவனைக் கொல்ல முயன்ருன். திருமாலின் அருளால் சிறுவன் இடையூறின்றி விளங்கினுன்.

தன் தீய சினத்தை அடக்கலாற்ரு இரணியன் ஒரு நாள் சிறுவனையழைத்து "ஏடா சிறுவ! நீ சொல்லும் நாராயணன் என்பவன் யாண்டுளன் ? என் தம்பியைக் கொன்ற அக்கள்வன் என் சினத்துக்கு அஞ்சி எங்கோ கரந்து உறைகின்ருன். அவனும் ஒரு தெய்வமா ? நீ அவனை எனக்குக் காட்டுதி. உன்கண்முன் அவனைக் கொன்று நானே கடவுள் என்பதை உனக்கு மெய்ப்பிப்பேன்" என்ருன். சிறுவன் "தந்தையே! நாராயணன் தூணிலும் உளன் துரும்பிலும் உளன்" என்ருன். எங்கே அவன் தெய்வமானுல் இத் தூணி லிருந்து அவன் வெளி வரட்டும்" என்று ஒரு தூணை எட்டி உதைத்தான். உடனே தூண் பிளந்து நரசிம்ம வடிவாய் வெளித் தோன்றினுர் நாராயணர். இரணியன் அடங்காச்சினமூண்டு தன் தம்பியைக்கொன்ற பழிக்குப் பழி வாங்குவதாகக் கூறி எதிர்த்தான். திருமால்

அவனைப் பற்றிச் சென்று வாயிற்படியில் வீற்றிருந்து அவனை மடிமேல் வைத்துத் தம் கூரிய கை நகங்களால் அவன் வயிற்றைக் கிழித்துக் கொன்று அவனது குருதி முழுவதையும் பருகினார்.

தான் பிரமம் என்று பேசிப் பொல்லாங்கு செய்து திரிந்த இரணியன்மேல் திருமால் கொண்டிருந்த சினத்தீ அவனைக் கொன்ற பின்னும் குறைந்திலது. அவனது குருதியாகிய நெய்யால் கொழுந்துவிட்டு வளர்ந்தது. அதனால் திருமால் மதிமயங்கி உலகத்தையே அழிக்கத் தொடங்கினார். இரணியனது குருதியே அதனை உண்ட திருமாலின் மதியை மயக்கி இத்தகைய கொடுமை செய் வித்தது எனின் அவன் எத்தகைய கொடியனாய் இருந்து இருப்பான். பிரகலாதனும் திருமகளும் பலவாறு புகழ்ந்து ஆற்றியும் கோபம் தணிந்திலது.

அதனைக் கண்ட பிரமன் முதலிய தேவர்கள் தேவ தேவராகிய திருநீலகண்டனிடம் புகலடைந்து முறை யிட்டனர். சிவபெருமான் சரபப்பறவை வடிவுகொண்டு நரசிம்மத்தை நோக்கிச் சென்றார். சரபத்தினைக் கண்ட நரசிம்மம் அஞ்சியோடத் தொடங்கிற்று. துரத்திச் சென்ற சரபம் தன்மீது பட்டவுடனே நரசிம்மம் தன் கொடுமை அடங்கப்பெற்று அமைதியுற்றது. தன் இயல் பாய நல்லுணர்வைத் திருமால் பெற்றார்.


தம் தவறுதலை உணர்ந்த திருமாலும், ஏனைய தேவர்களும் சிவபெருமானைப் புகழ்ந்து பாடி அருள் பெற்றனர். பிரகலாதன், திருமால், தேவர், மனிதர்

முதலிய யாவரது பயமும் நீங்கிற்று. தங்களுக்கு விளைந்த கம்பத்தினை (நடுக்கத்தை = பயத்தை) நீக்கி யருளியதால் அத் தலத்திலே சிவபெருமானுக்குக் கம்பஹரேசுரர் (நடுக்கந் தவிர்த்த பெருமான்) என்ற திருப்பெயர் உண்டாக வேண்டுமென்றும், அங்கே அவரை அடைந்து வணங்கினரெல்லாரும் நடுக்கந் தீர்ந்து நலமெய்தச் சரபவடிவாக வீற்றிருந்து அருள வேண்டுமென்றும் வரம் பெற்றனர்.

அதனால் இத் தலத்தில் சிவபெருமானுக்குக் **கம்பஹரேஸ்வரர்** என்ற திருப்பெயர் ஏற்பட்டது. **சரப மூர்த்தியும்** ஆண்டு வீற்றிருந்து அடைந்தோர்க்கு அருள் செய்கின்றார்.

திரிபுரர் :— அசுவக்கிரீவன், விருஷபக்கிரீவன் வியாளக்கிரீவன் என்ற மூன்றுஅசுரர்கள் இருந்தார்கள். அவர்கள் தவமுயன்று பெருவலிமை உடையவராவதன் முன்னமே அவர்களை அழித்துவிட வேண்டும் என்று கருதிய தேவர்கள் சேனையோடு சென்று கடும்போர் விளைத்தனர். அஞ்சாது நெடுங்காலம் போர்புரிந்த அசுரர்கள் இனித் தாம்உயிர்தப்ப இயலாதென்றுணர்ந்து மாயையால் மறைந்து, மண்ணுலகத்தை அடைந்து, மாறுவேடத்தோடு திரிந்தனர்.

மண்ணுலகத்தில் காடுகளிலும், மலைகளிலும் திரிகின்றபொழுது வில்வமரம் அடர்ந்த ஒரு காட்டினையும், அதன்நடுவே ஒரு இலிங்கத்தினையும் கண்டனர். உயிர்பிழைத்தல் அரிதான நிலையிலிருந்த அசுரர்கள்



ஸ்ரீ சரபர்

அப்பெருமானிடம் அடைக்கலம் புகுந்தனர். இறைவன் அஞ்சேலென்றருளி அவர்களது நடுக்கத்தை விலக்கி அருளினர். "வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம் ஈண்டு முயலப்படும்" என்பதை நன் குணர்ந்த அசுரர்கள் இறைவனைக்குறித்து அருந்தவம் ஆற்றினர் அவர்களது தவத்துக்கு இரங்கி, சிவபெருமான் காட்சி யருளி, வேண்டும் வரங்களை வேண்டுமாறு பணித் தருளினுர்.

அசுரர்கள் "எம் இறைவனே எங்கள் பகைவராகிய அமரரால் அடக்கப்பட்டு யாம் பெரிதும் துன்புற்றேம். உயிருக்கு அஞ்சினேம். எங்கள் அச்சத்தைத்தவிர்த்த தேவரீரே அவர்களை யாங்கள் அடக்கும் ஆற்றலும் அருளவேண்டும். ஆதலால் தேவராலும் யாவராலும் அழியாதவையும், பொன், வெள்ளி, இரும்பு, என்ப வற்ருல் தனித்தனியாகியவையும், எங்கள் விருப்பம் போல் எங்கு வேண்டுமாயினும் உலவித் திரிபவையும் ஆகிய மூன்று கோட்டைகளை எங்களுக்கு அருள வேண்டும்" என்று வேண்டினர். இறைவன் அவ்வாறே அருள்பாலித்தார்.

அருள்பெற்ற அசுரர்கள் அன்று முதலாகத்தேவர் களையும், ஏனையோர்களையும் துன்புறுத்தத் தலைப் பட்டனர். பிரமன், திருமால் முதலிய தேவர்களும் அவர்களை எதிர்த்து ஆற்றலழிந்து அடங்கினர். இன்னல் பொறுக்க இலயாது அஞ்சினுர்க்கு அரணுகிய அரனுரிடம் முற்கூறிய வில்வ வனத்திற் சரண்புகுந்து

குறையிரந்து முறையிட்டனர். சார்ந்தோரைத் தாங்கும் தயாநிதியாகிய சிவபெருமான் அவர்களுக்குப் புகல் அருளித் திரிபுரத்து அசுரர்களை அழிக்கப்புறப்பட்டனர்.

அதுகாலை சூரிய சந்திரர்களே சக்கரங்களாகப் பூமியே தேராயமைந்தது. மேரு மலையே வில்லாகவும், வாசுகி என்ற பெரும் பாம்பே நாணுகவும் அமைந்தன. திருமால் அம்பாகவும், அக்கினிதேவன் முனையாகவும், வாயுதேவன் இறகாகவும் அமைந்தனர்.

இத்தகைய போர்த் துணைகளோடு இறைவன் பறப் படுங்காலை தேவர்கள் தாம் இறைவனுக்குப் போர்த் துணையாய் அமைந்ததைக் கருதிச் செருக்குற்றனர். இறைவன் அவர்கள் செருக்கை அழிக்கக் கருதினுன். தேரின்மேல் கால் வைத்தவுடன் அச்சு முறிந்தது. உடனே திருமால் விடைவடிவாய் அன்போடு தாங்கினுர். இறைவன் நகைத்தான். முப்புரமும் அழிந்தன. தேவர் கள் நடுக்கம் ஒழிந்தது.

திரிபுரர்கள் தங்கித் தவங்கிடந்த தலமாதலால் இத் தலம் திரிபுரவனம் எனப் பெயர்பெற்றது.

சுகோஷன் :— வேட்டுவகுலத்தில் பிறந்தவன். தனது உடல் வலிமையினுலே வழிப்போக்கர்களை வருத்திப் பொருள் அபகரித்து வாழ்ந்துவந்தான். அவ் வாறிருக்குங் காலத்தில் கர்மடன் என்னும் பிராமணன் எதிர்ப்பட அவனையும் துரத்திச் சென்ருன். பிராமணன்

மிகவும் பயந்து சிறிதுதூரம் ஓடினன். வேடன் பின் தோடர்ந்து ஓடிவருதலைக் கண்டு சற்று நின்று வேடனைப்பார்த்து "ஏ வேடா! நீ என்னைத் துன்புறுத்தாதே. நான் யாகம் செய்யப் போருள் வேண்டி சித்திர கீர்த்தி என்னும் அரசனைக் காணச் செல்கின்றேன். ஆதலின் நீ என்னை வருத்தின் பிரமஹத்தி உன்னைப் பற்றும். மேலும் நீ முன் ஜன்மத்தில் பற்பல பாவங்களைச் செய்து இப்போழுது வேட்டுவகுலத்திற் பிறந்திருக்கின்றாய். இனிமேலாவது இத் தீச்செயலை விட்டு விடு" என்று கூறினன். உடனே வேடன் அறிவு வந்து வீழ்ந்து வணங்கி "முன்ஜன்மத்தில் எப்பாவம் செய்தேன். சற்று விளக்கமாகக் கூறியருளவேண்டும்" என்று பிரார்த்தித்தான். பிராமணன், "சுகோஷா! நீ முதல் ஜன்மத்தில் கௌண்டில்ய கோத்திரத்தில் சம்புகாந்தன் என்னும் பேயருடன் பிராமணனாய்ப் பிறந்தாய். அப்போது அடியார்களையும் சிவச்சின்னங்களையும் தூஷித்துவந்தாய். மேலும் சிவலிங்கப் பிரதிட்டையின் போருட்டு உன்னிடம் யாசகத்திற்காக வந்த ஒருவரை மிக நிந்தித்தாய் அதனால் நீ க்ஷயரோகமடைந்து உடல் வாடி இறந்தாய். இப்போழுது இப் பிறவி பேற்றாய். இதுவே உன் வரலாறு" என்றான். அதனைக் கேட்ட வேடுவன் தான் செய்த பாவத்தை எண்ணி எண்ணி உடல் நடுங்கி மனம் நைந்து "ஐயனே! அடியேன் இனி யாது செய்வேன்; எவ்வாறு நற்கதி பேறுவேன்; உய்யும் வழியில்லையோ? அருள் செய்யும்" என்ன "நீ வில்வாரணியம் சேன்று ஸ்ரீ கம்பஹரேசுவரரை வழிடுக" என்று மோழிந்தான். அவ்வாறே அவ் வேடன்

ஸ்ரீ கம்பஹரேசுவரரை வழிபட்டு மறுபிறப்பில் மிதிலைப் பட்டினத்தில் கிருஸவரோமன் என்னும் அரசனாய்ப் பிறந்து சிவபெருமானுக்கும் சிவனடியார்களுக்கும் பணிகள் புரிந்து பின்னர் முத்தியின்பம் பெற்றான்.

வரகுணதேவன் :— இவன் மதுரை மன்னன். வேட்டை விருப்பினால் காட்டிற்குச் சென்று திரும்புங் கால் தேரில் கட்டப்பட்ட குதிரை அக்காட்டில் நித்திரை செய்யும் ஒரு பிராமணனை மிதித்துக் கொன்றுவிட்டது. அப்பாதகத்தால் பிரமகத்தி அரசனைப் பற்றியது. அரச னும் அதனால் மிகத் துன்பமடைந்தான். பற்பல பிராயச் சித்தங்கள் செய்தும் பயன் அடைந்தானில்லை. பின்னர் ஆலவாயண்ணல் ஆணைப்படி தன்னுடன் போர்புரிய வந்த சோழ அரசனைத் துரத்திக்கொண்டு வருகையில் திருவிடைமருதூர் என்னும் தலத்தின் எல்லையை அடைந்தவுடன் பிரமஹத்தி நீங்கியது உடனே அரசன் அத்தலத்து இறைவனை வணங்கிப் பல திருப்பணிகள் செய்துகொண்டு சிலகாலம்தங்கி இருந்தான். பிரமஹத்தி அரசனைவிட்டகன்றும் அரசனுக்கு அதனால் ஏற்பட்ட நடுக்கம் அகலவில்லை. மழைவிட்டும் தூவானம் விட வில்லை என்பதும் ஓர் பழமொழியன்றோ? அரசன் இந் நடுக்கம் எப்போது அகலும் என்று கவன்றான். திரு விடைமருதூரை விட்டகன்று மேற்கு நோக்கித் தன் நாட்டிற்குப் புறப்பட்டான். இத் (திருபுவனத்)தலத்து எல்லையை யடைந்ததும் அவனுக்கு இருந்த நடுக்கம் (அச்சம்) நீங்கியது. அங்குள்ள வில்வ வனத்திலே உள்ள பெருமானைக் கண்டான். தன் நடுக்கம் தீர்த்

தருளிய பெருமான் இவரே எனத் தெரிந்து இங்குத் தங்கிப் பணிகள் பல புரிந்து சென்றுன்.

## தீர்த்தங்கள்

சரப தீர்த்தம் :— ஸ்ரீ சரபமூர்த்திக்கு எதிரில் இருக்கிறது.

தேவதீர்த்தம் :— ஸ்ரீ கம்பஹரேசுவரருக்கு ஈசான்யதிக்கில் உள்ளது. இதற்கு வருண தீர்த்தம் என்ற வேறு பெயரும் உண்டு.

ஞான தீர்த்தம் :— தேவதீர்த்தத்துக்குக்கீழ்பால் அரைமைல் தொலைவில் உள்ளது.

வியாச தீர்த்தம் :— ஸ்ரீ கம்பஹரேசுவரருக்கு வாயுதிக்கில் ஒன்றேகால்மைல் தூரத்தில் இருக்கின்றது.

பிருகுதீர்த்தம் :— வியாச தீர்த்தத்திற்குத் தென்பால் முக்கால் மைலில் இருக்கின்றது.

சித்ததீர்த்தம்:— பிருகுதீர்த்தத்துக்கு அக்கினி திக்கில் அரைமைலில் உள்ளது.

இத்தீர்த்தங்களில் நீராடிப் பேறுபெற்ருேர் வருணன் முதல் பல்லோராவர்.

112776

## 8. தல விருட்சம்

வில்வம் :— சுவாமி கோயில் வடக்குப் பிராகாரத்தில் இருக்கின்றது.

O. 23:38. 21193
N43-3

## 9. வழிபட்டோர்கள்

அசுவக்கிரீவன், விருஷபக்கிரீவன், வியாளக் கிரீவன், பிரமாதி தேவர்கள், இலக்குமி, வருணன், விஷ்ணு, சித்ரரதன், சுகோஷன், மாந்தாதா, நாரதர், வரகுணன், ராஜராஜன் முதலியோர் வழிபட்டுப் பற்பல பேறுகளைப் பெற்றுள்ளார்கள்.

## 10. சுற்றுக்கோயில்கள்

விநாயகர் ஆலயங்களும், ஐயனர், பிடாரி முதலிய கிராம தேவதைகளின் ஆலயங்களும் உள.

## 11. மண்டபங்கள்

வசந்தமண்டபம் :— அழகான வேலைப் பாடுகள் காணப்படுகின்றன. நாற்புறங்களிலும் இரதத் திற்கு உள்ளதுபோல கருங்கல்லாலாகிய சக்கரங்கள் அமைந்திருக்கின்றன.

## 12. சிற்பங்கள்

ஆலயத்தில் காணப்படும் உருவங்கள் யாவும் மிக அழகான வேலைப்பாட்டுடன் விளங்குகின்றன. சரபர் சந்நிதியிலுள்ள பூதேவி, சீதேவி உருவங்கள் சிற்ப இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. சோமாஸ்கந்தர் மண்டபத்தின் தென் பகுதியில் பரத நாட்டிய பாவங்கள் அமைய வேலைப்பாடு செய்யப்

பட்டிருக்கிறது. இதிகாச சம்பந்தமுள்ள பல உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. ராஜராஜேசுவரன் பெருமை விளங்கக் கட்டியது ஆதலின் சிற்பிகளினுடைய முழுத்திறனும் தூண்கள், மண்டபங்கள், விமானங்கள் ஒவ்வொன்றிலும் விளங்குவதாக இருக்கின்றன. சுவாமி கோயில் கருப்பக்கிரக விமானம் முழுதும் கருங்கல்லால் ஆக்கப்பட்டது. அதிலுள்ள உருவங்களும் கருங்கற்களாலாயினவே. அக்கருப்பக்கிரகத்தில் சுவாமிக்கு நேராக மேலேஉள்ள தளத்தில் பெரியநாயகர் கோயில் அமைந்திருக்கிறது. அதிலுள்ள திருவுருவம் கருங்கல்லாலாகியதே.

## 13. நித்தியபூஜைகளும் திருவிழாக்களும்

காரண காமிக ஆகமப்படி நாடோறும் ஐந்து கால பூஜைகள் நடைபெறுகின்றன. பங்குனி உத்திரத்தில் பிரமோற்சவம் நடத்தப்படுகின்றது. நிறைபணி, நவராத்திரி, வியதீபாதம் போன்ற ஏறுபடிகளும் உள.

## 14. சொத்துக்கள்

நஞ்சையில் சுமார் 870 ஏக்கரும் புஞ்சையில் சுமார் 496 ஏக்கரும், நத்தம் வகையரா 260 ஏக்கரும் இருக்கின்றன். சர்க்காரில் இருந்து மோகினித்தோகை ரூ 4173—5—2 கிடைக்கிறது. சுமார் ரூ 26500 போறுமானமுள்ள திருவாபரணங்கள் இருக்கின்றன. வெள்ளியில் இடபவாகனம் ஒன்றும், வெள்ளிப் படிச் சட்டம் மூன்றும் இருக்கின்றன. சில கட்டிடங்களும் இருக்கின்றன.

## 15. திருப்பணி

பழுதுபட்டிருந்த இரண்டாங் கோபுரத்தைப் புதிய தாகக் கட்டி வர்ணம் வைக்கப்பட்டது. மேலே இராச கோபுரம் வேடிப் பேற்பட்டு அபாய நிலையில் இருந்த தைப் பிரித்து எடுத்து மோட்டைக் கோபுரமாக வேலைசெய்யப்பட்டிருக்கின்றது சுவாமி கோயிலினது தெற்கு வடக்குஇருபிராகாரங் களையும் உயர்த்திக் காங்கிரீட் பரப்பி கருங்கல் தளவரிசை போடப்பட்டிருக்கிறது இரண்டாங் கோபுரத்திற்கும் கீழை



இரண்டாங்கோபுரம்

இராஜகோபுரத்திற்கும் இடையிலுள்ள நடப்புக்குத் தளவரிசை செய்யப்பட்டிருக்கின்றது, திருமாளிகைப்பத்தி மண்டபங்களும், திருமடைப்பள்ளியும் பழுதுபார்க்கப் பட்டு வெள்ளை வைக்கப்பட்டிருக்கிறது. நந்தவனம் சீர்செய்து புதுச்செடிகள் போடப்பட்டுள்ளன.

சுவாமி கோயில் கருப்பக்கிரக விமானம் பழுது பார்த்து வர்ணம் தீட்டி 1941 இல் கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டது. அர்த்தமண்டபம், மகாமண்டபம் தளம் பூராவும் வெள்ளை வைத்துச் சேப்பஞ் செய்யப் பட்டது. அர்த்தமண்டபத்தில் மையப்பத்தி பிரித்து எடுத்துக் கல்யாணகூட வேலையாகத் தூக்கிக் கட்டி ஜன்னல்களும் வைக்கப்பட்டன.

ஸ்ரீ சரபமூர்த்தி சன்னதி முன்புறம் இரும்புக் கம்பி அடைப்புக் கதவும், தகர ஷெட்டும்; ஸ்ரீ அறம்வளர்த்த நாயகி அம்மன் சன்னதி முன்புறமும் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி சன்னதி முன்புறமும் தகர ஷெட்டும்; ஸ்ரீ உற்சவமூர்த்திகளிருக்கும் மேடைக்கு முன் இரும்புக் கம்பி அடைப்பும் கதவும்; ஸ்ரீ நவக்கிரகள் இருக்கும் இடத்தில் சுற்றிலும் கம்பி கிராதி அடைப்புக்கதவும்; ஸ்ரீ நாயகர் சன்னதி முன்புறமும் ஸ்ரீ ஆடிப்பூர அம்மன் சன்னதி முன்புறமும் இரும்பு தள்ளுக்கதவுகளும்; ஸ்ரீ சரபர் உற்சவமூர்த்தி சன்னதியில் கம்பிக் கதவும்; திருவாபரண அறைக்கு இரும்பு அடைப்புக்கதவும் சுவாமி சன்னதி மேல்தளத்திற்குப் போகும் படிக்கட்டு வாசலில் இரும்பு அடைப்புக் கதவும்; கீழப்பிராகாரம் வடக்கு வாசலுக்கு இரும்புக்கம்பி கதவும்; மகாமண்டப முன்புறம் இரும்புக்கம்பி அடைப்புக் கதவும்; வண்டிகள் போட கிழக்குப்பிராகாரத்தில் வடக்குப் பக்கத்தில் தகர ஷெட்டும்போடப்பட்டிருக்கின்றன. மேலத்திருமாளிகைப் பத்தி ரிப்பேர் செய்து வெள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. குடிதண்ணீர் வசதிக்காக (ஆட்டோமாட்டிக்) பம்பு வைக்கப்பட்டிருக்கிறது. ஆபீஸ் கட்டிடம் புதிதாகக் கட்டப்பட்டிருக்கிறது.


## 16. சமயப்பணி

உற்சவ காலங்களிலும், ஏனைய சிறப்பு நாட்களிலும் சமயப் பிரசாரங்கள் நிகழ்த்துவிக்கப்பெறுகின்றன. கும்பாபிஷேக காலத்தில் தல வரலாற்றினைச் சுருக்கமாக அறிந்துகோள்ளும்வண்ணம் "திரிபுரவனத் தல மகிமைச் சுருக்கம்" என்னும் உரை நடை நூல் வேளியிட்டு யாவருக்கும் வழங்கப்பேற்றது. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த "சகலகலாவல்லி மாலை" என்னும் பாராயண நூல் உரையுடன் வேளியிடப்பட்டிருக்கிறது. யாத்ரீகர்கள் வசதிக்காக தல யாத்திரைப் படங்கள் வாங்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

17—2—47 இல் மாஜி மந்திரி P. S. குமாரசாமி ராஜா அவர்கள் தலைமையில் ஹரிஜன ஆலயப் பிரவேச விழா நடைபேற்றது.

## 17. நிர்வாகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன பரிபாலனத்திற்கு உட்பட்ட தேவஸ்தானங்களுள் இதுவும் ஒன்று. ஆதீனகர்த்தரவர்களாக எழுந்தருளி இருக்கும் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** அவர்கள் ஆதீன கர்த்தா ஸ்தானத்தை வகிக்க ஆரம்பித்தது (20-5-45) முதல் இவ்வாலயத்தையும் பரிபாலனம் செய்து வருகின்றார்கள்.



சேயலகம்

## 18. கல்வெட்டுக்கள்

இத் திருக்கோயிலில் 7 கல்வெட்டுக்கள் உள்ளன. அவைகளை அரசாங்கக் கல்வெட்டிலாகா அதிகாரிகள் படி எடுத்துச் சென்றுள்ளார்கள். அவைகளின் சுருக்கங்கள் அவ்விலாகா அதிகாரிகள் வெளியிடும் ஆண்டு அறிக்கையில் (Annual Reports on South Indian Epigraphy) வெளிவந்துள்ளன. அவைகளின் விபரங்கள் 1907 ஆம் ஆண்டைய 189 முதல் 192 முடிய உள்ள கல்வெட்டுக்களினுலும், 1911 ஆம் ஆண்டைய 159 முதல் 160 முடிய உள்ள கல்வெட்டுக்களினுலும், 1932 ஆம் ஆண்டைய 61 ஆவது எண்ணுள்ள கல்வெட்டாலும் அறியலாம். இக் கல்வெட்டுக்கள் இவ் ஊர்ச் சிவபெருமானுக்கு நித்திய நைமித்தியங்களுக்கு நிபந்தங்கள் அளித்த செய்திகளைப் புலப்படுத்துகின்றன.

$\frac{197}{1907}$ கல்வெட்டிலிருந்து மூன்ருங் குலோத்துங்கனுக்கு வடநாட்டில் பெருவெற்றி கிடைத்தமையும், அங்குக் கிடைத்த பெரும் பொருள்களைக் கொண்டு தாராசுரத்திலும், திருபுவனத்திலும் கோயில்கள் கட்டினமையும், அவைகள் அவனது முன்னோர்கள் கட்டிய கங்கைகொண்டசோழபுரம், தஞ்சை கோயில்களை ஒத்ததாகவே கட்டப்பட்டமையும் தெரியவருகிறது.

இம் மன்னனுடைய ஞானகுரு சித்தாந்த இரத்தினுகரத்தின் ஆசிரியராகிய ஸ்ரீ ஸ்கந்தசம்புவினுடைய மக

ளுகியஈஸ்வரசிவனுகும். இவரால் இக் கோயில் ஆவா கனம்செய்யப்பட்டது. இங்குஎழுந்தருளியிருக்கும் இறை வனின் திருப்பெயர் திரிபுவனஈச்சரமுடையமகாதேவர் ஆகும். இம்மன்னனுக்குத் திரிபுவனவீரதேவன் என் னும் பட்டப் பேயர் உண்டு. அப் பட்டப் பேயரை ஒட்டி இம் மன்னன் இவ்வூருக்குத் திரிபுவனவீரபுரம் என்று பேயர் வைத்துள்ளான்.

மற்ருெரு கல்வேட்டில் பாண்டிய அரசன் ஜடா வர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி பராக்கிரம பாண்டிய தேவருடைய ஆட்சி பத்தாவது ஆண்டில் திரிபுவன வீரபுரத்திலுள்ள ஊர்க் குடிமக்களுக்கும் அவ்வூர்க் காவல் பாத்தியமுள்ள குலமங்கலநாட்டினர்க்கும் நடந்த ஒரு ஒப்பந்தத்தைக் குறிக்கிறது. கள்ளர் மக்களின் திருமணம் ஒவ்வோன்றிற்கும் ஒவ்வோரு புடவை கோடுக்கவேண்டியதேன்றும், அவர்கள் இவ்வூர் மக்க ளிடம் நியாயவழி தவறி நடக்கக் கூடாதேன்றும், துன் புறுத்தக்கூடாதேன்றும், அந்த சேலேயும் முதல் திருமணத்திற்குத்தான் கோடுக்கபடுமேன்றும் முடிவு செய்யப்பட்டதாக அறிவிக்கின்றது.

மற்ருென்றில் சேன்ணே பேருமாள் என்ற குலோத் துங்கசோழவரையன், அந்நாட்டுத் தலேவன் உடையார் குலசேகரதேவரேன்ற உபாகாராயன் முன்னிலேயில் மேற்போந்த ஒப்பந்தத்தை முடிவு செய்து கோண்டான் எனத் தேரியவருகின்றது.

## 19. திருப்பாடல்கள்

வடமொழியில் எழுதப்பெற்றுள்ள தல புராணம் ஏட்டுப் பிரதி ஒன்று கிடைத்திருக்கிறது. அது தமிழில் மொழிபெயர்ப்புச் செய்யப்பெற்றிருக்கிறது. தேவார பாடல்கள் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆயினும் சில போதுப் பாடல்கள் சேர்க்கப்பெற்றிருக் கின்றன.



ஸ்ரீ சரபர் கோயில்

உ

சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.

பூச வினியது நீறு புண்ணியமாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் றிருநீறே.

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் றிருநீறே.

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாடோறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே.

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையு ணின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுண் மந்திர மஞ்செ ழுத்துமே.

ஊனி லுயிர்ப்பை யோடுக்கி யோண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்
தேனை வழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆன கெடுப்பன அஞ்சே ழுத்துமே.

புத்தர் சமண்கழுக் கையர் போய்கோளாச்
சித்தத் தவர்கள் தேளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திர மாவன வஞ்சே ழுத்துமே.

திருச்சிற்றம்பலம்

—திருஞானசம்பந்த சுவாமிகள்

திருச்சிற்றம்பலம்

நிரவோலி வேள்ளமண்டி கேடுவண்டமூட நிலநின்றுதம்ப
மதுவப்
பரமோரு தேய்வமேய்த விதுவோப்பதில்லை இருபாலுநின்று
பணியப்
பிரமனு மாலுமேலை முடியோடுபாத மறியாமைநின்றபேரியோன்
பரமுத லாயதேவர் சிவனுயமூர்த்தி அவனுநமக்கோர் சரணே.

தடமல ராயிரங்கள் குறைவோன்றதாக நிறைவோன்றுதன்க
ணதனுல்
உடன்வழி பாடுசெய்த திருமாலையேந்தை பேருமானுகந்து
மிகவும்
சுடரடி யான்முயன்று சுழல்வித்தரக்கன் இதயம்பிளந்த
கோடுமை
அடல்வலி யாழியாழி யவனுக்களித்த அவனுநமக்கோர்சரணே

கள்ளனேன் கள்ளத்தோண்டாய்க் காலத்தைக் கழித்துப்
தேள்ளியே னுகிநின்று தேடினே னுடிக்கண்டேன் [போக்கித்
உள்குவா ருள்கிற்றேல்லா முடனிருந் தறிதியேன்று
வேள்கினேன் வேள்கிநானும் விலாவிறச் சிரித்திட்டேனே.

வெள்ளநீர்ச் சடையனார்தாம் வினவுவார் போலவந்தென்
உள்ளமே புகுந்துநின்றார்க் குறங்குநான் புடைகள்போந்து
கள்ளரோ புகுந்தீரென்னக் கலந்துதா னோக்கிநக்கு
வெள்ளரோ மென்றுநின்றார் விளங்கிளம் பிறையனாரே.

விளக்கினார் பெற்றவின்ப மெழுக்கினாற் பதிற்றியாகும்
துளக்கினன் மலர்தொடுத்தாற் றூயவிண் ணேறலாகும்
விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ஞ்ஞெறி ஞானமாகும்
அளப்பில கீதஞ்சொன்னார்க் கடிகடா மருளுமாறே.

வளைத்துநின் றைவர் கள்வர் வந்தெனை நடுக்கஞ் செய்யத்
தளைத்துவைத் துலையை யேற்றித் தழலெரி மடுத்த நீரில்
திளைத்துநின் றாடு கின்ற ஆமைபோற் றெளிவி லாதேன்
இளைத்துநின் றாடு கின்றே னென்செய்வான் றோன்றி னேனே.

முழுத்தழன் மேனித் தவளப் பொடியன் கனகக்குன்றத்
தெழிற்பரஞ் சோதியை யெங்கள்பி ரானை யிகழ்திர்கண்டீர்
தொழப்படுந் தேவர் தொழப்படு வானைத் தொழுதபின்னைத்
தொழப்படுந் தேவர்தம் மாற்றொழுவிக்குந்தன்தொண்டரையே.

பெருங்கடன் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும்போம்
இருங்கடன் மூடி யிறக்கும் இறந்தான் களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபர முங்கொண்டு கங்காளராம்
வருங்கடன் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே.

மனிதர்கா ளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழ லீசன் எனுங்கனி
இனிது சாலவு மேசற்ற வர்கட்கே.

திருச்சிற்றம்பலம்

—திருநாவுக்கரசு சுவாமிகள்

திருச்சிற்றம்பலம்

பூாறுதாங்கிய காடரோபடு தலையரோமலைப் பாவையோர்
கூறுதாங்கிய குழகரோகுழைக் காதரோகுறுங் கோட்டிள
ஏறுதாங்கிய கொடியரோசுடு பொடியரோவிளங் கும்பிறை
ஆறுதாங்கிய சடையரோநமக் கடிகளாகிய அடிகளே.

ஒன்றிநீர்கள்வந்துறைமினேநுமக்கிசையுமாநினைந்தேத்துவீர்
குன்றிபோல்வதோ ருருவரோகுறிப் பாகிநீறுகொண் டணி
இன்றியேயில ராவரோவன்றி யுடையராயில ராவரோ [வரோ
அன்றியேமிக அறவரோநமக் கடிகளாகிய அடிகளே.

இறைவ னென்றெம் பெருமானை வானவ ரேத்தப்போய்த்
துறையோன் றித்தூ மலரிட் டடியிணை போற்றுவார்
மறையன்றிப் பாடுவ தில்லை யோமல்கு வானிளம்
பிறையன்றிச் சூடுவ தில்லை யோஎம் பிரானுக்கே,

தாருந்தண் கொன்றையுங் கூவி ளந்தனி மத்தமும்
ஆரு மளவறி யாத ஆதியும் அந்தமும்
ஊருமொன் றில்லை உலகே லாம்உகப் பார்தொழப்
பேருமோ ராயிரம் என்பரால் எம்பி ரானுக்கே.

திருச்சிற்றம்பலம்

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திருச்சிற்றம்பலம்

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளே னினதடி யாரொடல் லால்நர கம்புகினும்
எள்ளேன் றிருவரு ளாலே யிருக்கப் பெறினிறைவா
உள்ளேன் பிறதெய்வ முன்னையல் லாதெங்க ளுத்தமனே.

உ23: 38, 21193
N43-3



வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனநின்பால்
தாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே.

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க வென்னை யாண்டாய்க்
குள்ளந்தா ணின்றுச்சி யளவு நெஞ்சாய்
உருகாதா லுடம்பெல்லாங் கண்ணா யண்ணா
வெள்ளந்தான் பாயாதா னெஞ்சங் கல்லாங்
கண்ணிணையு மரமாந்தீ வினையி னேற்கே.

திருச்சிற்றம்பலம்

—மாணிக்கவாசக சுவாமிகள்

யாவர்க்கு மாமிறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாமுண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.

—திருமூலர்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

—உமாபதிசிவம்

112776

2.C
8

813

4-25